(ஒன்பதாவது பாராளுமன்றம் - நான்காவது கூட்டத்தொடர்)

**இல. 58.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2023 செப்தெம்பர் 20, புதன்கிழமை, மு.ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

2693/2023

கௌரவ கே.பீ.எஸ். குமாரசிறி,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஹோமியோபதி மருத்துவ முறையானது பக்கவிளைவுகள் அற்ற, பல்வேறு நோய்களைக் குணப்படுத்தும் ஒரு மருத்துவ முறையாக இலங்கையில் பிரசித்தி பெற்றுள்ளது என்பதையும்;

(ii) இத்தகைய மருத்துவ சிகிச்சைகளை அளித்துவருகின்ற சிறந்த ஹோமியோபதி வைத்தியர்கள் பலவருட காலமாக பதிவுசெய்யப்படாது உள்ளனர் என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) தம்மை பதிவு செய்துகொள்வதற்காக பல வருடங்களாக காத்திருக்கும் ஹோமியோபதி வைத்தியர்களைப் பதிவுசெய்ய தயாரிக்கப்பட்டுள்ள வேலைத்திட்டம் யாது என்பதையும்;

(ii) செய்முறைப் பரீட்சை ஒன்றினூடாக அந்த வைத்தியர்களின் புலமையைப் பரிசீலித்து இவர்களைப் பதிவுசெய்ய முடியுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) ஹோமியோபதி மருத்துவ முறையை முன்னேற்றுவதற்காக எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) ஹோமியோபதி சிகிச்சைகளுக்குத் தேவையான மருந்துகளை இறக்குமதி செய்ய முறையான வேலைத்திட்டம் தயாரிக்கப்படுமா என்பதையும்;

(iii) ஹோமியோபதி பல்கலைக்கழகத்தை மீண்டும் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2.

2846/2023

கௌரவ யூ.கே. சுமித் உடுகும்புர,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புதிய வாகனமொன்றின் முதல் பதிவு நடவடிக்கை மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களத்தின் நாராஹேன்பிட்டி தலைமை அலுவலகத்தில் மாத்திரம் மேற்கொள்ளப்படுகின்றதா என்பதையும்;

(ii) இன்றேல், முதல் பதிவு நடவடிக்கையினை மேற்கொள்ளக்கூடிய மோட்டார் வாகனத் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) வருடாந்தம் உரிமை மாற்றம் செய்யப்படுகின்ற வாகனங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) ஒரு நாள் வாகன உரிமை மாற்றல் சேவை மற்றும் சாதாரண சேவை என்பவற்றுக்காக அறவிடப்படுகின்ற கட்டணம் வாகன வகுப்பின் பிரகாரம் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3.

2934/2023

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி,— பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் தொடர்பில் விசாரணை மேற்கொள்வதற்காக நியமிக்கப்பட்ட சனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கைக்கு அமைவாக அத்தாக்குதல் தொடர்பில் குற்றஞ் சாட்டப்பட்டுள்ள பொலிஸ் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) குற்றஞ் சாட்டப்பட்டுள்ள மேற்படி ஒவ்வொரு பொலிஸ் உத்தியோகத்தரினதும் பெயர், உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்தில் வகித்த பதவி மற்றும் சேவை நிலையம் என்பவை தனித்தனியே யாவையென்பதையும்;

(iii) மேற்படி உத்தியோகத்தர்களில் தற்போது சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்கள் ஒவ்வொருவரினதும் பெயர், சேவை நிலையம் என்பன தனித்தனியே யாவையென்பதையும்;

(iv) மேற்படி உத்தியோகத்தர்களுள் சில உத்தியோகத்தர்கள் இலங்கை பொலிஸ் சேவையில் உயர் பதவிகளை வகிப்பதன் காரணமாக உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் தொடர்பான விசாரணைகளுக்கு இடையூறு விளைவிப்பதற்கு அல்லது விசாரணை அறிக்கைகளில் மாற்றங்களைச் செய்வதற்கான சாத்தியம் இருப்பதனை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(v) ஆமெனில், அது தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்பைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

2972/2023

கௌரவ ஹேஷா விதானகே,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பாதுகாப்பற்ற முறையில் பாடசாலை மாணவர்கள் சாலை ஓட்டப் போட்டிகளில் பங்குபற்ற வைக்கப்படுகின்றனர் என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) பாரிய வாகன நெரிசல் நிலவுகின்ற சந்தர்ப்பங்களில் பிரதான நகரங்களைச் சார்ந்ததாக அவ்வாறான சாலை ஓட்டப் போட்டிகளை நடாத்துவதற்காக பாடசாலைகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி அனுமதியைப் பெற்றுக்கொள்ளும் பாடசாலைகள்/ நிறுவனங்கள் சாலை ஓட்டப் போட்டிகளில் கலந்துகொள்ளும் மாணவர்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்காக மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) பிரதான நகரங்களைத் தவிர்த்து வாகன நெரிசல் குறைவான வீதிகளை மாத்திரம் பயன்படுத்தி சாலை ஓட்டப் போட்டிகளை நடாத்துவது பொருத்தமானதாக அமையுமென்பதனை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(v) ஆமெனில், மேற்படி விடயம் தொடர்பில் அவசியமான அறிவுறுத்தல்களை பாடசாலைகளுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5.

3074/2023

கௌரவ அஸோக அபேசிங்ஹ,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) இலங்கை புகையிரதத் திணைக்களத்தில் —

(i) பணியாற்றும் மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு பதவியின் அடிப்படையில் தனித்தனியாக எத்தனை என்பதையும்;

(ii) நிரந்தர மற்றும் ஒப்பந்த/அமய அடிப்படையில் பணியாற்றும் ஊழியர்களின் எண்ணிக்கை தனித்தனியாக எத்தனை என்பதையும்;

(iii) இன்றளவில் ஒப்பந்த /அமய அடிப்படையில் பணியாற்றும் ஊழியர்களை நிரந்தரமாக்குவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6.

3096/2023

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை தேயிலைச் சபைக்காக கிருமிநாசினிகளின் இரசாயனக் கூறுகளை பகுப்பாய்வு செய்வதற்கான இயந்திரமொன்று கொள்வனவு செய்யப்பட்ட திகதி யாது என்பதையும்;

(ii) அதற்காக, செலவிடப்பட்ட தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி இயந்திரம் இதுவரை பயன்படுத்தப்படவில்லை என்பதை அறிவாரா என்பதையும்;

(iv) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(v) இது தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

7.

3108/2023

கௌரவ சிவஞானம் சிறீதரன்,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) யாழ்ப்பாணம், நெடுந்தீவில் இன்றளவில் இருக்கின்ற மாடுகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) நெடுந்தீவில் உள்ள கால்நடைகளின் எண்ணிக்கை ஒவ்வொரு கால்நடை இனங்களின் அடிப்படையில் வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

(iii) மேற்படி கால்நடைகளுக்கு அவசியமான உணவு மற்றும் நீர்த் தேவை எவ்வாறு பூர்த்தி செய்யப்படுகின்றது என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) நெடுந்தீவில் விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகமொன்று நிறுவப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) நெடுந்தீவிற்கென நிரந்தர கால்நடை வைத்தியர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளாரா என்பதையும்;

(iii) இன்றேல், அதற்கான காரணம் யாதென்பதையும்;

(iv) மேற்படி தீவிற்கு நிரந்தர கால்நடை வைத்தியர் ஒருவர் நியமிக்கப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

8.

3232/2023

கௌரவ நிரோஷன் பெரேரா,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நீர்கொழும்பு – குளியாப்பிட்டி வீதியில், தும்மோதரை புதிய பாலத்தை நிர்மாணிப்பதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடு எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி பாலத்தின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iii) குறித்த பாலத்தின் நிர்மாணப் பணிகள் நிறைவு செய்யப்படவேண்டிய திகதி யாதென்பதையும்;

(iv) மேற்படி பாலத்தின் நிர்மாணப் பணிகளை மேற்கொள்ளும் ஒப்பந்த நிறுவனம் யாதென்பதையும்;

(v) இன்றளவில் மேற்படி ஒப்பந்த நிறுவனத்திற்குச் செலுத்தப்பட்டுள்ள தொகை எவ்வளவு என்பதையும்;

(vi) தும்மோதரை புதிய பாலத்தின் நிர்மாணப் பணிகளை துரிதமாக நிறைவு செய்வதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள்,— ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் பொது அலுவல்களில் 1 ஆம் இலக்கப் பிரேரணை மீதான நடவடிக்கைகள் இன்றைய அமர்வில் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 27 இன் ஏற்பாடுகளிலிருந்து விலக்குப் பெறுமாக.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— அத்தியாவசிய பொதுச் சேவைகள் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— 1979 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க, அத்தியாவசிய பொதுமக்கள் சேவை சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதி அவர்களுக்கு கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய, 2023 செப்டெம்பர் 12 ஆம் திகதிய 2349/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் மற்றும் அதன் அட்டவணையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.09.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான பிரகடனம் அங்கீகரிக்கப்படுமாக.

*2.

வனசீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சர்,— காடு பேணற் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (451 ஆம் அத்தியாயமான) காடு பேணற் கட்டளைச் சட்டத்தின் 24(1) (ஞ),(ட) மற்றும் (ண) ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 64(2)(ஊ) ஆம் பிரிவு, 23அ, 23ஆ, 23இ, 23ஈ மற்றும் 28(3) ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 64(1) ஆம் பிரிவு, 24(1) ஆம் பிரிவு, 3அ ஆம் பிரிவின் (3), (4), (5) மற்றும் 6 ஆம் மற்றும் 64 ஆம் பிரிவுகள், 3(4) ஆம் பிரிவு மற்றும் 64 ஆம் பிரிவு மற்றும் 58 ஆம் மற்றும் 59 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்க வேண்டிய 64 ஆம் பிரிவின் கீழ், வனசீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2023 ஆகஸ்ட் 21 ஆம் திகதிய 2346/02 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.09.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*3.

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்,— தொல்பொருளியல் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (188 ஆம் அத்தியாயமான) 1940 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க தொல்பொருளியல் கட்டளைச் சட்டத்தின் கீழ் 46 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 47(1) ஆம் பிரிவின் கீழ் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரால் 2023 மே 25 ஆம் திகதி ஆக்கப்பட்டதும் 2023.07.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*4.

இலங்கை தேசிய கண் வங்கி நம்பிக்கைப் பொறுப்புச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*5.

குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*6.

தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*7.

சிரேட்ட அறிவுறுத்தும் சட்டத்தரணிகள் என்ற கௌரவிப்பை அளித்தல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*8.

பிரிவிடல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*9.

கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*10.

நீதிமன்றம், நியாயசபை அல்லது நிறுவனமொன்றை அவமதித்தல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*11.

இலங்கைத் துறைமுக அதிகாரசபை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*12.

குடியியல் வான்செலவு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*13.

விலங்கின நலம்பேணல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*14.

கப்பற்றொழில் முகவர்களுக்கு, சரக்கனுப்புநர்க்கு, கலன்செயற்படுத்தாப் பொதுக்காவுநர்க்கு மற்றும் கொள்கலன் செயற்படுத்துநர்க்கு உரிமமளித்தல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*15.

துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர்,— குடியியல் வான்செலவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.1),— 2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, குடியியல் வான்செலவுச் சட்டத்தின் 6,10,11,13,14,16 மற்றும் 31 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 117 ஆம் பிரிவின் கீழ் துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2022 ஆகஸ்ட் 09 ஆம் திகதிய 2292/34 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.05.26 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*16.

துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர்,— குடியியல் வான்செலவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.2),— 2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, குடியியல் வான்செலவுச் சட்டத்தின் 6, 10, 11, 26, 31(ஈ), (உ),(ஊ),(எ) மற்றும் (ஏ) ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 117(2)(ஞ) பிரிவின் கீழ் துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2023 ஏப்ரல் 03 ஆம் திகதிய 2326/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.08.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*17.

நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்,— கூட்டிணைக்கப்பட்ட சட்டக்கல்விப் பேரவைக் கட்டளைச் சட்டத்தின் கீழ் விதிகள்,— (276 ஆம் அத்தியாயமான) கூட்டிணைக்கப்பட்ட சட்டக்கல்விப் பேரவைக் கட்டளைச் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழ் நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு அமைச்சரின் ஒருமைப்பாட்டுடன் கூட்டிணைக்கப்பட்ட சட்டக்கல்விப் பேரவையினால் ஆக்கப்பட்டு, 2023 மே 15 ஆம் திகதிய 2332/02 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.07.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான விதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*18.

நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்.— மத்தியஸ்த (விசேட வகுதிளைச் சார்ந்த பிணக்குகள்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2003 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க மத்தியஸ்த சட்டத்தின் 4 (2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட்ட வேண்டிய 27 ஆம் பிரிவின் கீழ் நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2023 சனவரி 14 ஆம் திகதிய 2314/80 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.08.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*19.

நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்.— நீதித்துறைச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க நீதித்துறைச் சட்டத்தின் 29அ(2) ஆம் பிரிவின் கீழ், நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2023 ஏப்ரல்.21 ஆம் திகதிய 2328/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.08.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*20.

நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்,— நீதித்துறைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க நீதித்துறைச் சட்டத்தின் 45(1அ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 61 ஆம் பிரிவின் கீழ், நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2023 யூலை 04 ஆம் திகதிய 2339/06 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.09.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*21.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மற்றும் கைத்தொழில் அமைச்சர்,— கம்பெனிகள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பெனிகள் சட்டத்தின் 222 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 527 ஆம் பிரிவின் கீழ் கைத்தொழில் அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2023 மார்ச் 17 ஆம் திகதிய 2323/41 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.08.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*22.

வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர்,— அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் சட்டத்தின் கீழ் அறிவித்தல்,— 1995 ஆம் ஆண்டுக்கான 35 ஆம் இலக்க, அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் சட்டத்தின் 4(1)(ஊ) ஆம் பிரிவின் கீழ், வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2022 ஆகஸ்ட் 26 ஆம் திகதிய 2294/54 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.09.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*23.

துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர்,— கப்பற்றொழில் முகவர்களுக்கு கப்பற்சரக்கனுப்புநர்க்கு, கலன் செயற்படுத்தாப் பொதுக்காவுநர்க்கு மற்றும் கொள்கலன் செயற்படுத்துநர்க்கு உரிமமளித்தல் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1972 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, கப்பற்றொழில் முகவர்களுக்கு கப்பற்சரக்கனுப்புநர்க்கு, கலன் செயற்படுத்தாப் பொதுக்காவுநர்க்கு மற்றும் கொள்கலன் செயற்படுத்துநர்க்கு உரிமமளித்தல் சட்டத்தின் 3(5) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 10 ஆம் பிரிவின் கீழ் துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2022 யூலை 07 ஆம் திகதிய 2287/24 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.05.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*24.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 1),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2023 மார்ச் 24 ஆம் திகதிய 2324/45 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.04.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*25.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 2),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2022 செப்டெம்பர் 09 ஆம் திகதிய 2296/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.10.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

26.

சர்வதேச லயன்ஸ் கழகம் மாவட்டம் 306ஏ-தேசிய அபிவிருத்தி மன்ற நம்பிக்கை நிதியம் (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

27.

புகையிலை வரி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

28.

வைட் றோஸ் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

29.

ரொசான் ரணசிங்க ஜனசஹன மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

30.

மனித உரிமைகள் அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

31.

சிவில் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

32.

சமாதானம், கல்வி வலுவூட்டல் மற்றும் அபிவிருத்தியிற்கான விளையாட்டு நிறுவகம் (SPEED) (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

33.

அவசரகால பொதுச் சுகாதாரச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

34.
கிழக்கு மீளெழுச்சி அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

35.
இலங்கை ஐக்கிய கிறிஸ்தவ நட்புரிமை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

36.
சமாதி சுகாதார சேவைகள், சுற்றாடல், விவசாய, கலாசார மற்றும் விளையாட்டு நிலையம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

37.
தென்னிலங்கை மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தலைமைத்துவப் பயிற்சிபீடம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

38.
சஹன சமுதாய அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

39.
சமாதி தியான மன்றும் யோகாசன நிலையம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

40.
றுஹுணு உதானய அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

41.
“மாத்தறைப் பருவம்” அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

42.
இலங்கை காப்புறுதி நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

43.
விவாக (பொது) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

44.
முஸ்லிம் திருமணம், மணநீக்கம் (நீக்கம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

45.
தஸ்ஸனா பௌத்த சன்விதானய (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

46.
இலங்கை பிளாஸ்டிக் மற்றும் இறப்பர் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

47.
திருமணப் பதிவு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

48.
திருமணத்திற்கான ஆகக்குறைந்த வயது சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

49.
தொழில் வல்லுனர்களின் சமூக சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

50.
பாராளுமன்றத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

51.

மாகாணசபைத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

52.

இலங்கை மருந்தியல் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

53.

இலங்கை பட்டயக் கப்பல்தரகர்கள் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

54.

ஸ்ரீ லங்கா பெப்டிஸ்ட் சங்கம் (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.